**செ.வெ.எண்:15** **நாள்: 08.02.2018**

# பத்திரிக்கை செய்தி

புதுக்கோட்டை மாவட்டத்தில், கால்நடை பராமரிப்புத்துறையின் மூலம் பிப்ரவரி மாதத்தில் 09.02.2018 முதல் 22.02.2018 முடிய இருவார கோழிக் கழிச்சல் நோய் தடுப்பூசி முகாம் கால்நடை மருந்தகங்களின் மூலம் தொடர்புள்ள அனைத்து கிராம ஊராட்சிகளிலும் நடைபெற உள்ளது.

கோழிக்கழிச்சல் வியாதியானது கோழிகள் மற்றும் இதர பறவை இனங்களை தாக்கக்கூடிய வைரஸ் கிருமியினால் ஏற்படக் கூடிய வியாதி ஆகும். இந்நோய் தாக்கப்பட்ட கோழிகள் உடனடியாக இறப்பு ஏற்பட்டு, கோழி வளர்ப்போருக்கு மிகப்பெரிய பொருளாதார இழப்பினை ஏற்படுத்தும். இந்நோய்க்கான தடுப்பூசி 8-வார வயதுடைய அனைத்து கோழிகளுக்கும் தங்களது கிராமத்திலேயே கால்நடை பராமரிப்புத் துறையினரால் 09.02.2018 முதல் 22.02.2018 முடிய குழுக்கள் அமைத்து போடப்படவுள்ளது.

ஆகவே, கோழி வளர்ப்போர் தங்கள் கோழிகளை தடுப்பூசி முகாமிற்கு கொண்டு வந்து தடுப்பூசி போட்டு கோழிக் கழிச்சல் நோயிலிருந்து கோழிகளை பாதுகாத்து பயனடைய தெரிவிக்கப்படுகிறது.

மேற்காணும் தகவலை புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ் இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**